FMM

# முதல் இடைப் பருவத் தேர்வு – 2024

11 - ஆம் வகுப்பு

## பொதுத்தமிழ்

காலம் : 1.30 மணி

மதிப்பெண்கள் : 45

**I அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.** 7 X 1 = 7

1. பாயிரம் இல்லது ............ அன்றே.
   அ) காவியம் ஆ) பனுவல் இ) பாடல் ஈ) கவிதை
2. "வான் பொய்த்தது" – என்ற சொற்றொடர் உணர்த்தும் மறைமுகப்பொருள்
   அ) வானம் இடிந்தது ஆ) மழை பெய்யவில்லை
   இ) மின்னல் வெட்டியது ஈ) வானம் பொய்க்காது
3. காவடிச்சிந்துக்குத் தந்தை என்று அழைக்கப்படுபவர் யார்?
   அ) பாரதிதாசன் ஆ) அண்ணாமலையார் இ) முருகன் ஈ) பாரதியார்
4. பகுபத உறுப்புகளுள் இடம் பெறும் அடிப்படை உறுப்புகள் எவை?
   அ) பகுதி, இடைநிலை, சந்தி, சாரியை, விகுதி, விகாரம்
   ஆ) பகுதி, இடைநிலை, சாரியை இ) பகுதி, சந்தி, விகாரம் ஈ) பகுதி, விகு
5. ஒப்புரவு என்பதன் பொருள் ......... . அ) அடக்கமுடையது
   ஆ) பண்புடையது இ) ஊருக்கு உதவுவது ஈ) செல்வமுடைய
6. மொழி முதல் எழுத்துக்கள் எத்தனை?
   அ) 12 ஆ) 22 இ) 24 ஈ) 18
7. ஒற்றை வைக்கோல் புரட்சி என்ற நூலின் ஆசிரியர்
   அ) நம்மாழ்வார் ஆ) மசானுபுஃபுகோகா இ) சொக்கலிங்கம் ஈ) மங்கை

**II அ) கீழ்வரும் வினாக்களுக்கு எவையேனும் இரண்டனுக்கு விடையளிக்கவும்.** 2 x 2 =

8. இனம், மொழி குறித்த இரசூல் கம்சதோவ் பார்வையைக் குறிப்பிடுக.
9. தமிழர்கள் புகழ், பழியை எவ்வாறு ஏற்றதாகப் புறநானூறு கூறுகிறது?
10. நல்ல செயல்களை விரைந்து செய்யச் சொல்வதை குறள் வழி விளக்குக.

**ஆ) கீழ்வரும் வினாக்களுக்கு எவையேனும் இரண்டனுக்கு விடையளிக்கவும்.** 2 x 2 =

11. மதிப்புக் கூட்டுப் பொருள்கள் என்றால் என்ன?
12. பேச்சு மொழி எழுத்து மொழியைக் காட்டிலும் உணர்ச்சி வெளிப்பாட்டு சக்தி மிக்கது ஏன்
13. கோட்டை எனும் சொல் திராவிட மொழிகளில் எவ்வாறு எடுத்தாளப்பட்டுள்ளது?

**III எவையேனும் மூன்றனுக்கு விடை தருக.** 3 x 2 =

14. பேச்சு வழக்கை எழுத்து வழக்காக மாற்றுக. முயற்சி செஞ்சா அதுக்கேற்ற பலன் வராம போவாது.
15. அணிந்துரை – புணர்ச்சி விதி தருக.
16. *மயங்கொலிச் சொற்களை ஒரே தொடரில் அமைத்து எழுதுக.*
    உலை, உளை, உழை



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

17. "Earth Environment" கலைச் சொல் அறிக.

18. பார்த்தான் - பகுபத உறுப்பிலக்கணம் தருக.

**IV அ) ஏதேனும் ஒன்றனுக்கு மட்டும் விடை தருக.** 1 x 4 = 4

19. சு.வில்வரத்தினம் பாடத்தான் வேண்டும் என எவற்றைக் குறிப்பிடுகிறார்?

20. ஐங்குறுநூற்றுப் பாடல் சுட்டும் திணை, முதற்பொருள், கருப்பொருள்களை எழுதுக.

**V அ) ஏதேனும் ஒன்றனுக்கு மட்டும் விடை தருக.** 1 x 4 = 4

21. மலை மனித வாழ்வில் சிறப்பிடம் பெற்றுள்ளது. - என்பதை எடுத்துக்காட்டுகளுடன் விளக்குக.

22. வேதிக்கலப்பில்லாத பூச்சிக்கொல்லி நடைமுறைக்குச் சாத்தியமா? நும் கருத்தை எழுதுக.

**VI ஏதேனும் ஒன்றனுக்கு மட்டும் விடை தருக.** 1 x 4 = 4

23. சொற்பொருள் பின்வருநிலையணியை விளக்குக.

24. *இலக்கிய நயம் பாராட்டுக. (மையக்கருத்துடன் எவையேனும் மூன்று நயங்கள் மட்டும்)*

மீன்கள்கோடி கோடிசூழ வெண்ணிலாவே! ஒரு
    வெள்ளியோடம்போல வரும் வெண்ணிலாவே!
வளர்ந்துவளர்ந்து வந்த வெண்ணிலாவே! மீண்டும்
    வாடி வாடிப் போவதேனோ? வெண்ணிலாவே!
கூகை ஆந்தைபோல நீயும் வெண்ணிலாவே! பகல்
    கூட்டினில் உறங்குவாயோ? வெண்ணிலாவே!
பந்தடிப்போம் உன்னையென்று வெண்ணிலாவே! நீயும்
    பாரில் வர அஞ்சினையோ? வெண்ணிலாவே! *- கவிமணி*

25. பகுதி, விகுதி, இடைநிலை ஆகியவற்றைப் பயன்படுத்திச் சொற்களை உருவாக்குக.




**VII ஏதேனும் ஒன்றனுக்கு மட்டும் விடை தருக.** 1 x 6 = 6

26. திருமலை முருகன் பள்ளு கூறும் வடகரை, தென்கரை நாட்டுப் பாடல்கள் வழி இயற்கை வளங்கள் விவரிக்க.

27. நன்னூல் பொதுப் பாயிரம், சிறப்புப் பாயிரம் வாயிலாக அறியலாகும் செய்திகளைத் தொகுத்துரைக்க.

28. வாடி வாசல் கதை வாயிலாக நீங்கள் உணர்ந்த கருத்துக்களை விளக்குக.

**VIII மனப்பாடப்பகுதி.** 4 + 2 = 6

29. அ) "அம்ம வாழி" - எனத் தொடங்கும் குறுந்தொகைப் பாடலை எழுதுக.

ஆ) "வடு" என முடியும் குறளை எழுதுக.



www.Padasalai.Net

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com